கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்  54/2025

வாதி தரப்பு சாட்சி – 2 இரத்தினசாமி திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 04.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **இரத்தினசாமி** | கிராமம் | |
| த/பெ | **பெரியசாமி** | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | **51** |

**வ.சா.2– இரத்தினசாமி – முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது வா.சா.ஆ.12

**முதல் விசாரணை முடிக்கப்பட்டது.**

**2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தது என்றால் பாலசுப்பிரமணி அழைத்து வந்தார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. பழனிச்சாமி மற்றும் அவரது மனைவிகள் மீனாட்சி, பச்சையம்மாள் ஆகியோரின் திருமணம் பற்றிய விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 6 குழந்தைகள். மேற்படி பழனிச்சாமியின் குழந்தைகள் அவர்களின் பிறப்பு மற்றும் பள்ளி மாற்று சான்றிதழ்களை வைத்துள்ளார்களா என்றால் வைத்துள்ளார்கள். வாதிகளுக்கு நான் என்ன உறவுமுறை என்றால் உறவினர் இல்லை. ஒரே இனத்தை சேர்ந்தவர்கள். பழனிச்சாமிக்கும், வாதிகளுக்கும் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**